இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

உங்களிடம் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்தினால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் தங்களிடம் அன்பு செலுத்துவோரிடம் அன்பு செலுத்துகிறார்களே. உங்களுக்கு நன்மை செய்பவர்களுக்கே நீங்கள் நன்மை செய்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் அவ்வாறு செய்கிறார்களே. திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என எதிர்பார்த்து நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? ஏனெனில், முழுவதையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்னும் நோக்குடன் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே. (லூக்கா 6:52-54)

# பணமும், உலகப்பொருட்களும் உண்மை மனமகிழ்வைத் தருவதில்லை -திருத்தந்தை

**வத்திக்கான்:** கடந்த பிப்ரவரி 13, ஞாயிறன்று நண்பகல் மூவேளை இறைவேண்டல் உரைக்கென புனித பேதுரு பேராலய வளாகத்தில் குழுமியிருந்த திருப்பயணிகளுக்கு அந்நாள் நற்செய்தி வாசகம் எடுத்துரைக்கும் பேறுபெற்றோர் (லூக் 6:20-23) என்ற பகுதி குறித்து சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மக்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் இயேசு தன் சீடரை நோக்கி, சீடர்களுக்குரிய பண்பு குறித்து எடுத்துரைத்தது அங்கிருந்தவர்களுக்கு வியப்பாக இருந்தது என எடுத்துரைத்தார்.

இயேசுவின் சீடர்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதன் பதிலை, இயேசு எடுத்துரைத்த 'பேறுகள்' என்பவை தருகின்றன என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், “ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர்' என்று உரைப்பது, அவர்கள் ஏழைகளும் பேறுபெற்றோருமாக இருக்கின்றனர். அவர்கள் ஏழைகளாக இருப்பதாலேயே பேறுபெற்றோராய் இருக்கின்றனர் என்ற இரண்டு விடயங்களை அறிவிப்பதாக உள்ளது, என மேலும் கூறினார்.

இயேசுவின் சீடர்கள் என்பவர்கள் பணத்திலும், உலகாயுதப் பொருள்களிலும் தங்கள் மனமகிழ்வைக் காண்பதில்லை, மாறாக, இறைவன் வழங்கும் கொடைகளான வாழ்வு, இயற்கை, சகோதரர் சகோதரிகள் என அனைத்துக் கொடைகளிலும் மனமகிழ்வைக் கண்டு கொள்வதுடன், தங்களிடம் இருப்பதை மற்றவர்களுடன் பகிர்வதிலும், எளிமையுடனும், முன்சார்பு எண்ணங்கள் இன்றி செயல்படுவதிலும் மகிழ்கின்றனர் என மேலும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.



புதுமையான முறையில் பெருமளவு மீன்கள் கிடைத்ததைக் கண்ட புனித பேதுரு, அனைத்தையும் துறந்துவிட்டு இயேசுவை பின்தொடர்ந்ததைப் பற்றி எடுத்துரைத்த கடந்த ஞாயிறின் நற்செய்தியையும் மேற்கோள் காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசுவின் குரலுக்கு செவிமடுப்பதற்கும், அவரை பின்பற்றுவதற்கும் உள்ள வேறுபாட்டையும் எடுத்துரைத்தார்.

பணம், பொருள் என தேடி ஓடி சேர்ப்பவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்ற உலகின் எண்ணத்திற்கு எதிராக, ஏழைகளே பெறுபெற்றோர், அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என கூறும் இயேசு, சுயநல எண்ணங்களால் தேடிக்குவிக்கும் அனைத்தும் இதயங்களை காலியாக வைத்திருக்கவே உதவுகின்றன என்பதை சுட்டிக்காட்டுகிறார் என உரைத்த திருத்தந்தை, நம்மையே மையப்படுத்தி நாம் ஆற்றும் சுயநல எண்ணங்களிலிருந்து நம்மை விடுவிப்பதன் வழியாக, பேறுபெற்றவர்களாக, மகிழ்ச்சியுடையவர்களாக இறைவன் நம்மை மாற்றுகிறார் என எடுத்துரைத்தார்.

நாம் ஒவ்வொருவரும் ஒரு சீடருக்குரிய தயார் நிலையில் இருக்கின்றோமா?, நம் கடின மனநிலைகளை கைவிட்டு இயேசுவின் பாதையை தெரிந்துகொண்டு, மனதில் மகிழ்வைக் காண்கிறோமா என்ற கேள்விகளை முன்வைத்து தன் நண்பகல் மூவேளை செப உரையை நிறைவுச் செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்

# பிறருக்கு ஒளியாகத் திகழுங்கள்

**ஸ்கூடாய், ஜொகூர்:** கடந்த பிப்ரவரி 12-ம் நாள், உலக அர்ப்பண வாழ்வு தினம் கொண்டாடப்பட்டது. அன்று மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டின் கத்தோலிக்க சமூகங்கள் தங்களது அர்ப்பண ஆழ்வுக்கான வாக்குறுதியைப் புதுப்பித்தனர். அன்றைய திருப்பலியின் மறையுரையில், ‘நாம் துறவறத்தாராகவும், மேய்ப்பர்களாகவும் இருந்தபோதும், சில வேளைகளில் பணியாற்றும் சமூகத்திற்கு ஒளியாகத் திகழ மறந்துவிடுவதோடு, இருளை அகற்றும் ஒளியாகவும் நாம் இருக்க தவறிவிடுகிறோம் என்று ஆயர் பெர்னட் போல் கூறினார். அதே வேளையில், அர்ப்பண வாழ்வு என்பது வெறுமனே அன்மீகப் பணிகளை மேற்கொள்வதல்ல என்றும் அவர் வலியுறுத்தினார்.

அருள்பணியாளர்கள் மற்றும் பங்கு சமூகங்கள் தங்கள் இதயங்களில் மீண்டும் இயேசுவின் அன்பின் ஒளியை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்தார். அன்று ஸ்கூடாய் கத்தோலிக்க மையத்தில் கொண்டாடப்பட்ட திருப்பலியில் ஆயர் அவ்வாறு பகிர்ந்துகொண்டார். "நாம் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் பாதையைத் தேர்ந்தெடுக்கும்போது, நமது மகிழ்ச்சிகள் மற்றும் குதூகலங்கள் அனைத்தும் "கொடுப்பதில்" இயேசுவின் வாழ்க்கை முறையை நாம் தழுவுகிறோம். பெரும்பாலும், மற்றவர்களிடமிருந்து நாம் எதைப் பெறுகிறோமோ, அதில் இருந்துதான் நமது மகிழ்ச்சி வருகிறது என்று நினைக்கிறோம். இன்னும் விவிலியம் மற்றும் திருஅவை போதனைகளின் வெளிச்சத்தில், நாம் எவ்வளவு அதிகமாக கொடுக்கிறோமோ, அந்தளவுக்கு மகிழ்ச்சி நம் வாழ்க்கையில் வரும் என்று மேலும் கூறினார் ஆயர்.

தொடர்ந்து, இயேசுவே அப்பமும் உயிருள்ள தண்ணீருமாவார் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் போதனையை மேற்கோள் காட்டி, இயேசு அவருடைய உயிரைக் கொடுத்தார். இதனால் நாம் எல்லா சோதனைகளையும் மரணத்தையும் வெல்ல முடிந்தது. உண்மையில் இயேசுவே நம் மகிழ்ச்சிக்கு அச்சாரமாக உள்ளார் என்று கூறினார்.



\இந்த நிலையான அர்ப்பண வாழ்வுக்கான வாக்குறுதியின் போது, *Melayani Lebih Sungguh* என்ற மலாய் பாடலை, அருள்பணி *Fr Valentine Gompok OFM Cap* அவர்கள் பாடினார். தொடர்ந்து அருட்சகோதரி *Liza Anggie FSIC* அவர்கள் இறைவேண்டலை ஒப்புக்கொடுத்தார்.

நிறைவாக, ஆயர் மூன்று கேள்விகளைச் சிந்தனைக்காக முன்வைத்தார்.

1 அர்ப்பண வாழ்வுக்கான அழைத் தலுக்கு நாம் நம்பிக்கையுள்ளவர்களாக உள்ளோமா?

2 நம் ஆலயத்தில் எதைப் பார்க்கிறோம்? கடவுளையா? மக்களின் நடவடிக்கைகளையா? அல்லது அன்னா மற்றும் சிமியோன் போன்று இரக்க உள்ளதோடு மெசியாவாகிய இயேசுவையா?

3. அன்னாவும் சிமியோனும் இயேசு பாலகனைக் கண்டபோது அரவணைத்துக் கொண்டார்கள். நமது உள்ளம் யாரை அரவணைக்கிறது? எது நம்மை இணைக்கிறது? எது நம்மை விடுவிக்கிறது?

# புனிதர்களுக்கான பக்தி முயற்சிகளில் (devotional efforts) தேவை ஆடம்பரமா ? எளிமையா?

அன்னை மரியா மற்றும் இதர புனிதர்கள் மட்டில் நாம் மேற்கொள்ளும் பக்தி முயற்சிகளில் தேவை ஆடம்பரமா? அல்லது எளிமையா என்ற கேள்வி எழுப்பினால், நிச்சயமாக எளிமையான கொண்டாட்டம் என்றே பதில் வரும். ஏனெனில், அன்னை மரியாவும் இதர புனிதர்களும் வாழ்ந்து மரித்த வாழ்வு எளிமையை உணர்த்துகிறது.

எந்த புனிதரும் இறக்கும் தருவாயில் செல்வந்தராக இறக்கவில்லை. 'ஏழையின் உள்ளதோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது (மத் 5:3) என்று பறைசாற்றினார் ஆண்டவர். அப்படியென்றால் உள்ளதாதல் ஏழைகளாக வாழ்வோருக்கு உரியதுதான் விண்ணகம்.

இங்கே ஆடம்பரத்திற்கு இடமில்லை. செல்வர்கள், மிக வசதியாக வாழ்வோர் விண்ணகம் செல்ல ஒரு வழி உண்டு. தனக்கு உள்ளதெல்லாம் விற்று ஏழைகளுக்கு கொடுக்க வேண்டும். அப்படி செய்தால் அந்த செல்வந்தனும் விண்ணகம் செல்லலாம். எனவே, புனிதர்கள் ஆடம்பரத்தைத் துறந்தவர்கள்.

புனித கிளாரா, இத்தாலியின் அசிசி நகரில் பிரபுக்கள் குடும்பத்தில் 1194 ஜூலை 16-ம் திகதி பிறந்தார். இவருக்கு 18 வயது நடந்தபோது, அசிசியின் புனித பிரான்சிஸ் ஆற்றிய தவக்கால மறையுரையால் ஈர்க்கப் பட்டார். பின்னர் பொதுப்பணி வாழ்வில் ஈடுபட்டார். கிறிஸ்துவுக்காக அனைத்து ஆடம்பரத்தையும் துறந்தார்.

இயேசு சபையைத் தோற்றுவித்த இஞ்ஞாசி யார் அவர்கள், இஸ்பெயின் நாட்டின் வடக்கேயுள்ள பாஸ்கு பகுதியில், 1491ம் ஆண்டு, உயர்குலத்தில் பிறந்தவர். இவர், தனது இளமைகால வாழ்வை, தனது குடும்ப லொயோலா அரண்மனையை பிரான்ஸ் நாட்டுப் போர்வீரர்களிடமிருந்து காப்பாற் றும் போர்ப் பணியிலேயே செலவழித்தார். பின்னர் ஒரு சூழலில் மனமாறி ஏழ்மையை ஏற்றார்.

இவ்வாறு இன்றைய புனிதர் அன்னை திரேசாவையும் அவரது எளிமையையும் நாம் அறிந்துள்ளோம். இவ்வாறாக, அன்னை மரியாவின் எளிமையைப் பற்றி விமர்சிக்க தேவையில்லை. லூக்கா நற்செய்தியில் மரியாவின் பாடலில் நாம் அறிவோம்.

ஆனால், இன்று நாம் கொண்டாடும் புனிதர்கள் விழாவில் அவர்கள் கொண் டிருந்த எளிமையும் ஏழ்மையும் வெளிப்படுத்தப்படுவது சிறிது சிறிதாக மாறிவருவது மறுக்க இயலாது ஒன்று.

புனிதர்களின் சாட்சிய வாழ்வை நினைவு கூரவும், அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு கிறிஸ்தவ வாழ்வு வாழவும் திருஅவை நமக்குப் புனிதர்களின் விழாவை ஏற்படுத்தியது. ஆனால், சில இடங்களில் மேற்கொள்ளப்படும், அளவுக்கு அதிகமான அலங்கரிப்புகளும் பணச் செலவும் நம்மை



பிரமிக்கச் செய்கிறது.

நமது புனிதர்களில் பலர் மறைசாட்சிகள். இவர்கள் இயேசுவுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள். இத்தகையோர் எந்த வகை ஆடம்பரத்தையும் எதிர்ப்பார்த்து வாழாதவர் கள். இயேசுவுக்காக தங்கள் உயிரை துச்சமென நினைத்தவர்கள். எனவே இவர்களுக்கு ஆடம்பரமான, அதிக செலவிலான கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்வோமானால் இவர்களின் தியாகம் பொருளற்றதாகிவிடும். எளிமையும் ஏழ்மையும் நமக்கான இரு கண்கள்.

*ஆர்.கே.*

### உக்ரைனின் அமைதிக்காக அனைவரும் செபிக்க திருத்தந்தை வேண்டுகோள்விடுத்தார்

**வத்திக்கான்:** பிப்ரவரி 13, ஞாயிறன்று, நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய பின் உக்ரைனிலிருந்துவரும் செய்திகள் மிகுந்த கவலை தருவதாக உள்ளதாகவும், அந்நாட்டில் அமைதி நிலவ அனைவரும் செபிக்க வேண்டுமென விசுவாசிகளிடம் கேட்பதாகவும் கூறினார்.

உக்ரைன் நாட்டு எல்லைகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இரஷ்ய துருப்புக்களால் எழுந்துள்ள பதட்ட நிலைகள் குறித்து தன் கவலையையும் செப விண்ணப்பத்தையும் பலமுறை விடுத்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஞாயிறன்று மீண்டும் ஒருமுறை அந்நாட்டிற்கான இறைவேண் டலுக்கு அழைப்புவிடுத்துள்ளார்.

# குவந்தானில் நோயுற்றோருக்கும் முதியோருக்குமான குணமளிப்பு திருப்பலி கொண்டாட்டம்

குவந்தான்: கடந்த 12 பிப்ரவரி அன்று திருத்தூதரான புனித தோமையார் பங்கில், புனித லூர்து அன்னை திருவிழாவோடு வரும் 30-ஆம் ஆண்டு நோயாளிகள் தினம் பங்குத்தந்தை ஜோர்ஜ் பாக்கியசாமி அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. நோயுற்றவர்கள் மற்றும் அவர்களைக் கவனித்துக் கொள்பவர்கள், நலவாழ்வு பணியாளர்கள் மற்றும் பொது நிறுவனங் களை அதிக அக்கறையுடன் இருப்பதை ஊக்குவிப்பதற்காக முப்பது ஆண்டு களுக்கு முன்பு புனித ஜோன் போல் II அவர்களால் இந்த நாள் ஏற்படுத்தப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.



இந்த 30-ம் ஆண்டின் கருப்பொருளாக *'உங்கள் வானகத் தந்தை இரக்கமுள்ள வராக இருப்பதைப் போல் நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்'* (லூக்கா 6:36) என்பது தேர்வுச் செய்யப்பட்டது.



முதியவர்கள் மற்றும் நோயாளிகள் காலை 11.00 மணிக்கு தேவாலயத்தில் சிறப்பு குணப்படுத்தும் திருப்பலிக்கு அழைக்கப் பட்டனர். மழையையும் பொருட்படுத் தாமல் சுமார் 150 இறைமக்கள் இத்திருப்பலியில் கலந்து கொண்டனர்.

திருப்பலி முடிவுற்ற உடனேயே, பங்குத் தந்தை ஜார்ஜ் பாக்கியசாமி அவர்கள் இறைமக்களை புனித நீரால் ஆசீர்வதித் தார். அதன்பிறகு, உடல்நலம் குறைந் தோருக்கு நோயிற்பூசுதல் திருத் தைலத்தால் பூசுதல் சடங்கை நிறை வேற்றினார்.

இந்த கோவிட்-19 தொற்றுநோயினை கருத் தில் கொண்டு பங்கு மக்களுக்கான பாதுகாப்பு பணிகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது போற்றற்குரியது என மக்கள் கருத்துரைத்தனர்.

## தாத்தா பாட்டிகள், முதியோருக்கான சிறப்பு நாள் கொண்டாட்டம்

உலகில் தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோருக்கான ஒரு சிறப்பு நாளைக் கடந்த ஆண்டு துவக்கி வைத்துக் கொண்டாடியதைத் தொடர்ந்து, இவ்வாண்டு ஜூலை மாதம் 24ம் தேதி இத்தினம் சிறப்பிக்கப்படுமென திருப்பீடம் அறிவித்துள்ளது.

வரலாற்றின் இந்த இரண்டாவது உலகத் தினத்திற்குத் தலைப்பாக 'அவர்கள் முதிர் வயதிலும் கனி தருவர்' என்ற 92-ம் திருப்பாடல் வாக்கியத்தை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தேர்வு செய்துள்ளார்.

# நமது சொல்லும் செயலும் உள்ளப் பண்பாட்டைக் காட்டுகிறது!

இன்று நாம் ஆண்டின் பொதுக்காலத்தின் 7-ம் ஞாயிறுவில் இணைகிறோம். 'அன்பைக் கொடுங்கள்; மன்னிப்பைக் கொடுங்கள் என இன்றைய வாசகங்கள் அழைப்பு விடுக்கின்றன. "இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்" என்பது ஔவை வாக்கு. கொடுப்பவர்தான் பெரியோர். மனித வரலாற்றைப் புரட்டி பார்த்தால் இது புலப்படும்.

முதல் வாசகத்தில், சவுலையும் அவரது இராணுவத்தையும் தாக்கும் வாய்ப்பு இருந்தாலும், பழிவாங்கும் வஞ்ச எண்ணத்தைத் துறந்து, மன்னிக்கும் குணத்தை வெளிப்படுத்துகிறார் தாவீது, "அவர் காலம் நிறைவுற்றுத் தாமாக இறக்கட்டும்" (1சாமு.26:10) என தாவீது பெருமிதத்துடன் கூறினார்.

இரண்டாவது வாசகத்தில், முதல் மனிதராகிய ஆதாம் கீழ்படியாமையால் செய்த தவறான முடிவால், உலகில் சாவு வந்தது. கடைசி ஆதாமோ, தந்தையாகிய கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் சரியான முடிவு செய்ததால் உலகோர்க்கு மீட்சி கிடைத்தது. வாழ்க்கை பாதையில் நாம் செய்யும் முடிவுகள்தான் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்கின்றன.

நற்செய்தியில் "பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின் றீர்களோ, அதையே நீங்களும் அவர் களுக்குச் செய்யுங்கள்" (லூக்.6:31) என இயேசு கற்பிக்கிறார். அன்றாடம் நாம் செய்யும் மன்றாட்டிலும் "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல் எங்கள் குற்றங்களையும் மன்னியும்" என்று மன்றாடுகிறோம்.

நமது வீடுகளில் 'வீடியோ கேம்' விளையாடும் பிள்ளைகள், எதிரியை எப்படி வீழ்த்திக் கொல்வது என்பதை கற்றுக் கொள்கின்றனர். அறிந்தும் அறியாமல் அந்த பிஞ்சு மனதில் குரோதப் புத்தியை விதைக்கின்றோம். இயேசுவின் போதனையின் அடிப்படை கோட்பாடு என்னவென்றால், நமது எதிரியையும் அன்பு செய்ய வேண்டும். நமக்கு பொல்லாங்கு செய்தாரையும் மன்னிக்க வேண்டும் என்பதாகும்.

இவ்வுலகில் இதனைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் திருத்தந்தை 2ம் ஜோன் போலும் தென்னாப்பிரிக்க அதிபர் நெல்சன் மண்டெலாவும் அடங்குவர். வத்திக்கான் புனித பேதுரு சதுக்கத்தில் திருத் தந்தையைத் துருக்கிய நாட்டவர் சுட்டார். திருத்தந்தை அவரைச் சிறையில் சந்தித்து மன்னிப்பு வழங்கினார். மண்டெலா, தமது 27 ஆண்டு கால சிறைவாசத்திற்கு காரண மானவர் மீது வஞ்சம் கொள்ளாமல், 1994ம் ஆண்டு நடைபெற்ற தமது அதிபராக பதவியேற்பு விழாவிற்கு அவரை அழைத்தார்.

அன்பாலும் மன்னிப்பாலும் கட்டுண்டு வாழ்வோர், இவ்வாழ்வின் பயனை மறுமையில் அடைவது திண்ணம். இதனைச் செய்வதற்கு மனித இயல்பு கொண்ட உடலால் அல்லாமல் ஆவிக்குரியத் தன்மையால்தான் முடியும் என புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் (1கொரி.15:45-49) வழிகாட்டுகிறார். நமது வாழ்க்கைப் பாதையிலும் அன்பையும் மன்னிப்பையும் விதைத்து, இறையாட் சிக்குப் பாதை அமைப்போம்.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ செம்பாஙான், செர்டாங்,*

**பொதுக்காலம் 7-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | 1சாமு 26: 2,7-9,12-13,22-23 |
| தி. பாடல்: | 103: 1-2. 3-4. 8,10. 12-13 |
| 2-ம் வாசகம்: | 1கொரி 15: 45-49 |
| நற்செய்தி: | லூக் 6: 27-38 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை—வாரம் 3**